## வாக்குரிமையை நசுக்குவதா?

# தேர்தல் ஆணையத்தின் நோக்கம் ஆபத்தானது!

## பொருளாதார மேதை அமர்த்தியா சென் பேட்டி!



**புதுடெல்லி, ஆக. 11 -**

**பொதுமக்களின் வாக்குரிமையை நசுக்குவது என்பது தேர்தல் ஆணையத்தின் நோக்கம் எனில் அது மிகவும் ஆபத்தானது என்று பொருளாதார நிபுணர் அமிர்தியா சென் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.**

அவரது பேட்டி வருமாறு:-

**கேள்வி** : நாடு முழுவதும் நடக்கும் தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

**பதில்** : இந்திய தேர்தல் ஆணையம் இதை முறையாகச் செய்தால் அதைப் பற்றி ஏன் கேள்வி எழப் போகிறது? அவசரம் அவசரமாக பிழைகளை நீக்க முயற்சி செய்தால் மேலும் பிழைகளே ஏற்படும் வாய்ப்புகள் அதிகரிக்கும். மேலும் அதன் விளைவு மோசமாகவும் இருக்கும். தேர்தல் ஆணையத்தின் முயற்சியின் நோக்கம் விமர்சிக்கத் தக்கதாக மாறி உள்ளது. அதன் நடுநிலைமை குறித்து பலத்த கேள்விகள் எழுந்துள்ளன. பாரபட்சமற்ற முறையில் நடந்து கொள்ளும் தேர்தல் ஆணையத்தின் தீவிர முயற்சிகளில் கூட கடுமையான பிழைகள் ஏற்படலாம் என்ற நிலையில் வர்க்கச் சார்பு உடைய தேர்தல் ஆணையத்தின் நோக்கம் ஆபத்து நிறைந்தது.

**கேள்வி** : தேர்தல் ஆணையத்தின் அவசர மான செயல்பாட்டினால் பெரும்பாலான மக்களின் வாக்குரிமை பறிக்கப்படும் அபாயம் உள்ளதா?

**பதில்** : தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் சந்தேகத்திற்கான காரணத்தை உருவாக்கக் கூடாது உச்சநீதிமன்றம் தன் மேற்பார்வை அதிகாரத்தை முறையாகப் பயன்படுத்தி தேர்தல் ஆணையத்தை கண்காணிக்க வேண்டும் என்பதும் மிகவும் முக்கியம். மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் இறுதிப் பொறுப்பு உச்சநீதிமன்றத்திற்கு உண்டு. அரசியல் அமைப்பின் உறுதிப் பாட்டையும் உத்தரவாதப்படுத்தும் வகையில் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளில் நாளை எதிர்காலம் குறித்த நம்பிக்கையும் நாம் அப்போது தான் தக்க வைக்கமுடியும்.

**கேள்வி** : பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் ஏழை மற்றும் புலம்பெயர்ந்த மேற்கு வங்க மாநிலத்தின் தொழிலாளர்களுக்கு எதிராக நடத்தப்படும் அட்டூழியங்கள் பற்றி தங்கள் கருத்து என்ன?

**பதில்** : இந்தியா அனைத்து மாநிலங்களின் குடி மக்களுக்கும் சொந்தமான ஒரு நாடு.வங்காளி, மகாராஷ்டிரர், தமிழர்கள் யாராக இருந்தா லும் சரி நாட்டின் எந்தப் பகுதியிலும் அவர்களுக்கு எதிராக பாகுபாடு காட்டப்படக்கூடாது.

பேரழிவை ஏற்படுத்தும் அதிகாரிகளின் அறியாமை

மேற்குவங்க தொழிலாளர்களை பாரபட்சமாக நடத்துவது மிக மோசமானது. வேறு எந்த மாநிலத்தின் புலம்பெயர்ந்த தொழிலாளர்களையும் பாகுபாடு நடத்துவதும் அப்படித் தான் .இதில் கவலை என்ன வென்றால் இந்தியர்களில் பல பிரிவினரை வங்க தேசத்திலிருந்து குடியேறியவர்கள் போல சித்தரிக்கும் போக்கு துரதிஷ்டவசமானது. கூடுதலாக இஸ்லாமிய எதிர்ப்பு உணர்வும் அதற்கு தூபம் போடும் பொழுது அவர்கள் மேலும் பாதிக்கப்படுகி றார்கள். பத்தாவது மற்றும் 11 ஆவது நூற்றாண்டில் பிறந்த வங்க மொழியை குறிப்பாக தில்லியில் உள்ள சில அதிகாரிகள், வங்க தேசத்தின் மொழியாக பார்க்கும் பொழுது அவர்களின் அறியாமையும் குழப்பமும் பேரழிவை ஏற்படுத்துகிறது.

**கேள்வி** : அடுத்த ஆண்டு நடைபெற உள்ள மாநில தேர்தலுக்கு தயாராகும் வகை யில் மேற்கு வங்கத்தில் இந்துத்து வாவை ஊக்குவிக்க பாஜக கடுமையாக உழைத்து வருவதாக தெரிகிறது, அவர்கள் வெற்றி பெறுவார்களா?

**பதில்** : இந்துமுஸ்லிம் நல்லுறவு என்பது மேற்கு வங்கத்தின் பெருமைமிகு பாரம்பரியங்களில் ஒன்று. மிக நீண்ட நெடிய வர லாறு படைத்தது. வகுப்புவாத அடிப்படையில் குறுகிய மனப்பான்மையை உருவாக்கி அந்த நல்லுறவை சீர்குலைக்க நினைக்கும் அரசியல் திட்டங்கள் நிறைவேறாது. குறுகிய பலனைப் பெறலாம். ஆனால் அந்த மாநிலத்தை வகுப்புவாத வெறுப்பின் கோட்டையாக மாற்றுவது அவ்வளவு எளிதல்ல. அம்மாநில சமூகக் கட்டமைப்பும் கலாச்சாரப் பிணைப்புகளும் ஆழமாக வேரூன்றியது. தூண்டி விடப்படும் பிரிவினை வாதத்திற்கு எதிராக அந்த மாநிலத்தின் மக்கள் ஒன்றுபட்டு நிற்பார்கள்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

---

## ‘முரசொலி’ ஏட்டின் 84ஆம் ஆண்டுப் பயணம்

# திராவிடர் கழகமும் ‘விடுதலை’யும் உச்சிமோந்து வாழ்த்துகின்றன!

## திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கை!



சென்னை, ஆக. 11 -

‘முரசொலி’ ஏட்டின் 84ஆம் ஆண்டுப் பயணம் குறித்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

மானமிகு சுயமரியாதைக்காரரான நமது முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளை - கையெழுத்து ஏடாக இருந்து இன்று திராவிட ஏவுகணையாக வளர்ந்துள்ள ‘முரசொலி’ நாளேடு, 84ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் எப்படி இரட்டைக் குழல் துப்பாக்கிகளோ அதே போன்று, 91ஆம் ஆண்டில் பயணம் செய்யும் “விடுதலை” நாளேடும், 84ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள “முரசொலி” நாளேடும் இரட்டைக் குழல்களே!

எதிர் நீச்சலிலும், அடக்குமுறை அம்புகளின் விழுப் புண்களாலும் வளர்ந்த திராவிடக் கொள்கை பரப்பும், பாதுகாக்கும் ஏடுகளான இவை இரண்டும் வெறும் காகிதங்கள் அல்ல; அறிவு ஆயுதங்கள், மூடநம்பிக்கைகளை வேரறுக்கும் விசித்திர வாள்கள்.

நெருக்கடி கால தணிக்கை நெருப்பாற்றையும் தண்டிய பயணங்கள்.

ஒருமுறை ‘முரசொலி’ நாளை முதல் வெளி வராது என்று கலைஞர் அறிவித்தவுடன் உடனே கோபாலபுரம் சென்று உரிமையுடன் வாதாடி மறு பரிசீலனைக்கு ஆளாக்கியதில் ‘விடுதலை’ ஆசிரியரான எனது பங்கும் சிறிது உண்டு என்பது இப்போது மகிழ்ச்சியூற்றாகிறது.

நல்ல கட்டமைப்புடன் தி.மு.க. தலைவர் மானமிகு மு.க. ஸ்டாலின் அவர்களது தலைமைத்துவத்தின் கீழ் வைகறையில் (சென்னையில்) நாம் படித்துப் பயன் பெறும் அரசியல், சமூக, திராவிட பண்பாட்டுப் பாதுகாப்பரண் அது!

வாழ்க வளர்க!

வழிகாட்டும் விழிகளைப் பரப்புவோம்!

பாதுகாப்போம்! வாழ்த்துகள்!!


இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## திருச்சி பஞ்சப்பூரில்

# ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் செல்போன் டவர் அமைக்கப்படும்!

## அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!



திருச்சி, ஆக. 11 –

திருச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

திருச்சி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் செல்போன் டவர் விரைவில் அமைக்கப்படும். பி.எஸ்.என்.எல். நிர்வாகத்து டன் பேசி அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

துப்புரவு பணியாளர்கள் போராட்டம் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது விரைவில் தீர்வு காணப்படும். எதிர்க்கட்சித் தலைவர்.எடப்பாடி பழனிச்சாமி செல்லும் இடங்களில் எல்லாம் அவரது கட்சியினரே எதிர்ப்புத் தெரிவித்து கருப்புக்கொடி போராட்டம் நடத்துகின்றனர்.

தமிழ்நாட்டில் போலி வாக்காளர்கள் சேர்க்காமல் இருக்க மிக கவனமாக இருப்போம். தலைமை அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. மிக முக்கியமாக வட இந்தியாவில் இருந்து வேலைக்கு வந்தவர்கள் நிரந்தர முகவரி இல்லாதவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க முடியாது. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

மழைநீர் வடிகால் பணிகள் அரசு செயலருக்கு உத்தரவிட்டு முழுவீச்சில் பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு முதல்வர், துணை முதல்வர் நேரடியாக கண்காணித்து வருகிறார்கள். வாய்க்கால்களில் உள்ள ஆகாயத்தாமரைகளை அகற்றும் பணிகளும் நடைபெற்று வருகிறது.

பஞ்சப்பூரிலிருந்து குடமுருட்டி வரை ரூபாய் 180 கோடியில் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

ரூபாய் 40 கோடியில் நில ஆர்ஜிதம் பணிகள் நடைபெற்று வருகிறது அது இல்லாமல் நடைபெற வாய்ப்பு உள்ளதா என்பது குறித்து ஆய்வு நடத்தப்படுகிறது.

திருச்சி மாவட்டம் மணப்பாறையில் சிப்காட்டில் 5ஆயிரம் பேருக்கு வேலைகொடுக்கும் புதிய தொழிற்சாலை விரைவில் அமைய உள்ளது.அது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விரைவில் அறிவிப்பார்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு கூறினார்.

பேட்டியின் போது மாநகர செயலாளர் மேயர் அன்பழகன் மற்றும் நிர்வாகிகள் உடன். இருந்தனர்.

---

## வாக்கு திருட்டு குற்றச்சாட்டு:

# தேர்தல் ஆணையம் விசாரணை நடத்த வலியுறுத்தல்!

## சரத்பவார் அறிக்கை!



நாக்பூர், ஆக. 11-

எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி எழுப்பிய வாக்கு திருட்டு குற்றச்சாட்டு குறித்து தேர்தல் ஆணையம் விரிவான விசாரணை நடத்த வேண்டும் என்று என்.சி.பி.(எஸ்.பி.) தலைவர் சரத்பவார் வலியுறுத்தி இருக்கிறார்.

பா.ஜ. மற்றும் தேர்தல் ஆணையத்துக்கு எதிராக மக்களவை எதிர்க்கட்சித் தலைவரான ராகுல்காந்தி கடுமையாக விமர்சித்து வருகின்றார். மேலும் பா.ஜ.வும், தேர்தல் ஆணையமும் வாக்கு திருட்டில் ஈடுபடுவதாகவும் குற்றஞ்சாட்டி உள்ளார். இது மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தி வருகின்றது.

இந்நிலையில் நாக்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய என்.சி.பி. (எஸ்.பி.) தலைவர் சரத் பவார், 2024ம் ஆண்டு மக்களவை தேர்தலுக்கு முன்பாக டெல்லியில் இருந்து இரண்டு பேர் என்னை சந்தித்தனர். சட்டப்பேரவைத் தேர்தலில் 288 தொகுதிகளில் 160 தொகுதிகளில் எதிர்க்கட்சியை (மகா விகாஸ் கூட்டணி) வெற்றி பெற வைக்கும் உத்தரவாதத்துடன் உதவுவதற்கு அவர்கள் முன்வந்தனர். நான் அவர்களை ராகுல் காந்திக்கு அறிமுகம் செய்தேன். அவரிடம் கூறியதை அவர் புறக்கணித்தார்.

இதுபோன்ற விஷயங்களில் நாம் (எதிர்க்கட்சிகள்) ஈடுபடக்கூடாது. மக்களிடம் நேரடியாக செல்ல வேண்டும் என்ற கருத்தையும் அவர் கொண்டு இருந்தார். இரண்டு நபர்களின் கூற்றுக்களுக்கு எந்த முக்கியத்துவத்தையும் நான் வழங்கவில்லை என்பதால் அவர்களின் விவரங்கள் என்னிடம் இல்லை. வாக்குத் திருட்டு குறித்து ராகுல் காந்தியின் விளக்கக்காட்டி நன்கு ஆராயப்பட்டு நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. தேர்தல் செயல்முறையின் நேர்மை மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் பிம்பம் குறித்த சந்தேகங்களை மக்களிடையே நீக்குவதற்காக எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி எழுப்பிய வாக்கு திருட்டு குற்றச்சாட்டு குறித்து தேர்தல் ஆணையம் விரிவான விசாரணை நடத்த வேண்டும். விசாரணை உண்மையை வெளிக்கொணரும் என்று நான் நினைக்கிறேன்” என்றார்.

---

## முதல்வருக்கு நன்றி பாராட்டு!

# தகைசால் தமிழர் விருது பெறும் கே.எம்.காதர் மொகிதீனுக்கு பாராட்டு விழா!

## கட்சித் தலைவர்கள் வாழ்த்துகின்றனர்!

சென்னை ஆக:11

தமிழ்நாடு அரசின் தகைசால் தமிழர் விருது பெறும் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் கே.எம்.காதர் மொகிதீன் அவர்களுக்கு பாராட்டு விழா, அவ்விருதை வழங்கிய திராவிட மாடல் நல்லாட்சி நாயகர் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி பாராட்டு விழா, மற்றும் சமுதாய சேவகன் ஒளி வீசும் காவலன் ஆவணப்படம் வெளியிட்டு விழா அடங்கிய முப்பெரும் விழா 15.8.2025 வெள்ளிக்கிழமை மாலை 4:30 மணி அளவில் எழும்பூர் பைஸ் மஹாலில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, தமிழ்நாடு பொதுப்பணி நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு,தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப் பெருந்தகை, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தோழர் டி.கே. ரங்கராஜன், தமிழ்நாடு அரசு சிறுபான்மையினர் ஆணைய துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ்,சி. மதிமாறன், கேரள மாநிலம் பாலக்காடு செய்யிது சாதிக்அலி சிஹாப் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் ஏற்புரையாற்றுகிறார்.

முன்னதாக சமுதாய சேவகன் ஒளி வீசும் காவலன் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் சாகிப் ஆவணப்படம் வெளியிடப்படுகிறது.

---

**பொள்ளாச்சி உடுமலையில் -**
**இன்று கள ஆய்வில்**
**முதல்வர் மு.க.ஸ்டாலின்!**

---

## 11–ஆம் வகுப்பிற்கு பொதுத் தேர்வு ரத்து அறிவிப்பு!

# மாணவர்களை மன உளைச்சலில் இருந்து காப்பாற்றியுள்ளார் முதல்வர்!

## தமிழ்நாடு அரசு ஊழியர்கள் – ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு நிறுவனத் தலைவர் சா.அருணன் வரவேற்பு!



சென்னை, ஆக.11–

மாநில கல்விக் கொள்கையின் முக்கிய அம்சமாக 11ஆம் வகுப்பிற்கு பொதுத் தேர்வு ரத்து என்ற அறிவிப்பு மாணவர்களை மன உளைச்சலில் இருந்து காப்பாற்றியுள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் வரவேற்று அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:

ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கை மாநில உரிமைகளைப் பறிக்கின்ற இந்தி மற்றும் சமஸ்கிருத மொழிகளைத் திணிக்கின்ற சர்வாதிகார கொள்கையாகவே உள்ளது , இதனால் மாநில மொழிகளை அழித்து இந்தி மற்றும் சமஸ்கிருத மொழிகளை திணித்து உள்ளது. அதாவது தமிழ்நாட்டில் மும்மொழி கொள்கையைக் கொண்டுவந்து அதன் மூலமாகக் கல்வி வளர்ச்சியை அழிக்க நினைத்து செயல்படுத்த துடித்து, தமிழ்நாட்டிற்கு கொடுக்க வேண்டிய நிதியை கூட கொடுக்க மறுத்து வருகிறது. இந்த சூழ்நிலையில் தான் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எந்த ஒரு சூழ்நிலையிலும் மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்க மாட்டேன் என சூளுரைத்து ரூ 2153 கோடி மட்டுமல்ல எத்தனை ஆயிரம் கோடியை நிறுத்தினாலும் ங்கள் தாய் மொழியான தமிழ் மொழியை அழிக்க நினைக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரான தேசிய கல்விக் கொள்கையை முழுமையாக ஏற்க மாட்டேன் என உறுதி பட தெரிவித்து நம் இனம் காத்து வருகிறார்.

இந்த நிலையில் தான் ஏன் நாம் மாநில கல்விக் கொள்கையை கொண்டுவரக் கூடாது என எண்ணி , சமூக நீதி காக்க சமத்துவத்தை நிலைநாட்ட பெயர் அளவில் சமூக நீதி என்றில்லாமல் இது திராவிட மாடல் ஆட்சி என்பதை பறைச்சாற்றும் விதமாக மாநில கல்விக் கொள்கையைக் கொண்டு வர டெல்லி உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் மதிப்புமிகு முருகேசன் அவர்களின் தலைமையில் 2022 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள கல்வியாளர்கள், பேரறிஞர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் பல்வேறு அமைப்புகளிடம் அறிக்கையை கேட்டு அவர்களின் அறிக்கைகளை ஒருங்கிணைத்து அறிக்கையை ஒட்டுமொத்த இந்தியாவையே திரும்பி பார்க்க செய்துள்ள மாநில கல்விக் கொள்கையின் அறிக்கையை இந்தியாவின் முதன்மை முன்னோடி முதலமைச்சர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு வரலாறு படைத்துள்ளார்.

தேசிய கல்விக் கொள்கையின் மூலம் மத சாயத்தையும், குலக் கல்வியைக் கொண்டுவந்து ஒட்டுமொத்த சமூக நீதியையும் அரசியல் அமைப்பையும் சிதைத்து மும்மொழி கொள்கையை கொண்டு வந்து சமஸ்த்கிருத மொழியையும் திணித்து மாநில மொழிகளை அழித்து ஒழிக்கும் செயலாகும். உதாரனமாக இந்தியை திணித்து இராஜஸ்தான், மகராஸ்டிரா போன்ற மாநிலங்களில் தாய்மொழியை அழிந்து வருவதை நாம் கண்கூடாக பார்க்க முடிகிறது. இந்த நிலையை அறிந்த தான் மாநில கல்விக் கொள்கையை கொண்டுவந்துள்ளார் 3ஆம் 5ஆம் 8ஆம் வகுப்புகளில் மாணவர்களுக்கு பொது தேர்வு என்பது மாணவர்களின் இடை நிற்றலை அதிகப்படுத்தும் அதேபோன்று ஏற்கனவே 10ஆம் வகுப்பு 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத் தேர்வு இடையில் உள்ள 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பள்ளி அளவில் தேர்வு நடை என இருந்ததைச் சென்ற ஆட்சியாளர்கள் தேசிய கல்விக் கொள்கையை பின்பற்றி 11ஆம் வகுப்பிற்கும் பொது தேர்வு என அறிவித்து தொடர்ந்து 10, 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் என தொடர்ச்சியாக மூன்று பொதுத் தேர்வை சந்தித்து வருகின்றனர். மாணவர்கள் இதனால் மாணவர்கள் தொடர்ந்து மன உளைச்சலால் அவதிப்பட்டு வருகின்றனர் இந்த நிலை அறிந்து மாணவர்கள் நலன் அறிந்து எப்படி மாணவர்கள் காலையில் உணவுக் கூட அருந்தாமல் பள்ளிக்கு வருகிறார்களே என வேதனைப் பட்டு ஒன்று முதல் 5ஆம் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை அறிவித்து தாய்க்கு தாயாகவும், தந்தைக்கு தந்தையாகவும் காலை உணவு வழங்கி வருவதை போன்று 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் கொரோனா பெருந்தொற்று ஏற்பட்ட காலத்தில் கல்வியில் பாதிப்பு அடைந்த மாணவர்கள் இடைநிற்றலை தவிர்க்க இல்லம் தேடிக் கல்வி , மாணவர்கள் மேற்படிப்பு பயில நான் முதல்வன், புதுமை பெண் திட்டம் , நான் புதல்வன் கல்லூரி கனவு , உயர் கல்விக்கு வழி காட்டி , திறன் திட்டம் இது போன்ற ஏழை மாணவர்களை மேம்படுத்த இது போன்ற பெருந்திட்டங்களை திட்டங்களை செயல்படுத்தி வருகிறாரோ அதே சூழ்நிலையில் தான் இன்று 11ஆம் பொது தேர்வை நடப்பாண்டில் இருந்தே ரத்து செய்து மாணவர்கள் நலன் காத்துள்ளீர்கள மேலும் ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கையில் 3ஆம் வகுப்பு 5ஆம் வகுப்பு 8ஆம் வகுப்பிற்கு பொது தேர்வு என இருந்ததை கைவிட்டு எட்டாம் வகுப்புவரை கட்டாய தேர்ச்சி என அறிவித்திருப்பதும், மேற்படிப்பிற்கான நீட் உள்ளிட்ட அனைத்து போட்டித் தேர்வும் கூடாது என பரிந்துரை செய்துள்ளதும் சமத்துவத்தையும் சமூகநீதியையும் பறைச்சாற்றி மாநில கல்விக் கொள்கையின் அறிக்கையை வெளியிட்டுள்ளார்

சரித்திர வரலாற்றை நிகழ்த்திய இந்தியாவின் முன்னோடி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் மற்றும் பள்ளிக் கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கும் நீதியரசர் மதிப்புமிகு முருகேசன் அவர்களுக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் பாராட்டுதலையும் நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

---



மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி மதுரை மாநகராட்சி 71 வது வார்டு த.வெ.க. வட்ட செயலாளர் விஜயகுமார், வட்ட இணைச் செயலாளர் சிவா உள்ளிட்ட அக்கட்சி நிர்வாகிகள் 50க்கும் மேற்பட்டோர் த.வெ.க.விலிருந்து விலகி மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் வடக்கு மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம் எல் ஏ,மாநில விவசாய அணி துணை செயலாளர் கணேசன், 71 வது வட்டச் செயலாளர் முனியாண்டி, பிரதிநிதி அன்புமதி உள்ளிட்டோர் உள்ளனர்.





திருச்செந்தூர் முதல் உடன்குடி மகளிர் விடியல் பயண புதிய பேருந்து வசதியை மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் கொடி அசைத்து துவக்கி வைத்தார். இதில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், நகர்மன்றத் தலைவர் சிவ ஆனந்தி ரமேஷ், நகரச் செயலாளர் வாள் சுடலை,நகர் மன்ற உறுப்பினர்கள் செந்தில், மணல் மேடு சுதாகர், ஆனந்த், அயலக அணி டேனியல் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.